# விடியல்
## The Dawn

இதழ்-110, ஜீன் -2018



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா.சுரேஷ்**
தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**முனைவர் ப.பிரதீபா**
தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**

திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
முனைவர் ந.சங்கீதா
திரு. செ.தங்கராஜ்
முனைவர் சு.முப்பிடாதி
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா
முனைவர் ம.சுரேஷ்
திரு க.தனபால்
திருமதி ல.வெண்ணிலா
திரு.வி.சந்திரன்


## ஜனநாயக (அ)நீதி

மக்களின் நலன், வளர்ச்சி சார்ந்து மக்களை முன்னேற்றப் பாதையில் ஈடுபடுத்தும் அனைத்து வழிமுறைகளையும் ஏற்படுத்திக் கொடுப்பது அரசின் இன்றியமையாத கடமை எனலாம். இந்தியா போன்ற ஜனநாயக நாடுகளின் பணி முழுக்க மக்களை முன்னேற்றும் பொருட்டு அமைய வேண்டும். மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் தொழிலகங்களை அமைத்தலும், வேலை வாய்ப்புகளை அதிகமாக உருவாக்குதலும் இப்பணிகளிலுள் அடங்கும். ஆனால், சூழலியல் சார்ந்து சுற்றுப்புறச் சூழலுக்குக் கெடுதலைத் தரக்கூடிய, மக்களுக்கு பலவித நோய்களையும், ஒவ்வாமையையும்


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி** (தன்னாட்சி)
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
I N D I A
Knowledge is Power



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher

உண்டாக்கும் ஆலைகளை அனுமதிப்பது மக்களின் நலன் கருதியா? அல்லது அரசு இயந்திரத்தை இயக்கும் அரசியல்வாதிகளின் சுயநலன் கருதியா? எனும் ஐயத்தை உண்டாக்குகிறது.

பல நூறு உயிர்களைக் காவு வாங்கியும், பல நூற்றுவர் உடல் உறுப்புகளைக் காவு வாங்கியும் இரத்தப் பலி கேட்கும் இயந்திரங்களாக ஆலைகள் இயங்கிக் கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது. பல ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகளை அள்ளிக் கொடுத்த போதும் பல லட்சம் மக்கள் வசித்துவரும் நிலத்தை வாழத் தகுதியற்ற நிலமாக மாற்றிவிட்ட பெருமை ஸ்டெர்லைட் காப்பர் தொழிற்சாலையையே சாரும்.

ஆலைக்கு குஜராத், கோவா, கேரளா, கர்நாடகா போன்ற பல மாநிலங்களும் அனுமதி மறுத்த நிலையில் தமிழகத்தில் இத்தனை ஆண்டுகள் செயல்பட அனுமதியளித்தது நம்முடைய அறியாமையைத் தெளிவாக காட்டுகிறது. எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் ஒன்று கூடி போராடிய தருவாயில் சில அரசியல் கட்சிகள் எதிர்ப்புக்கு ஆதரவளித்த போதும் பின்னர் ஸ்டெர்லைட் முதலாளித்துவ மாண்புகளுக்கு கட்டுப்பட்டுத் தன் வாய்க்குப் பூட்டு போட்டுக் கொண்டன.

பலமுறை ஆய்வுக்காகச் சென்ற பசுமைத் தீர்ப்பாயத்தையும், மற்ற சுகாதார அமைப்புகளையும், ஏன் நீதிமன்றங்களையும், நீதியையும் விலைக்கு வாங்கும் திறமை அகர்வால்களுக்கு இருந்தமையால் தர்மம் கடைச்சரக்காக மாறி மக்களின் முதுகில் குத்தியது. எங்கு மக்களிடத்தில் தன் அரசின் மீது அவநம்பிக்கையும், வாழ்வாதாரம் குறித்த பயமும் தொடர்ந்து பயமுறுத்துகிறதோ அங்கு போராட்டங்கள் வெடிக்கும். இது உலக

நாடுகளிடத்தில் நாம் கண்கூடாகக் காணும் நிகழ்வு. தன் எதிர்கால சூழலையும் அதிகாரிகளின் மெத்தனத்தையும் வெறுத்த மக்கள் தன் உரிமையைக் கேட்டு போராட்டத்தில் இறங்கியது தவறாகாது.

ஜனநாயக நாடு எனப் பெருமை பேசும் இந்தியாவில் எனக்கு “வாழும் உரிமை கொடு” எனப் போராடும் மக்களை எவ்வித அரசாணைகளும் இன்றி தீவிரவாதிகளைச் சுடுவதுபோல் சுட்டுத்தள்ளுவது தான் ஜனநாயக நீதியா? ஒன்றும் அறியா அப்பாவி மக்களுக்குத் தீவிரவாதி எனும் முத்திரை குத்தத்தான் அதிதீவிரமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறோமா? ஜனநாயகம் இறந்துபட்டதோ எனும் ஐயத்தை மக்களின் இறப்பு ஏற்படுத்தியது எனில் மிகையில்லை.

இதுவரை ஆயிரக்கணக்கான போராட்டங்களையும் போராட்டக் களங்களையும் நீர்த்துப் போகச் செய்திருக்கிறோம் என மார்தட்டிக் கொள்வதா ஜனநாயகத்தின் நீதி? போராட்டங்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய எவ்வித செயல்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்? குறைந்தபட்சம் காரணங்களையாவது கண்டறிய முற்பட்டுள்ளோமா எனில் ஐயமே.

இதுபோன்ற பல விடையில்லா கேள்விகளுடன் வலம் வரும் ஒவ்வொரு தமிழனுக்கும் “அரசு மக்களுக்கானதா? அல்லது முதலாளித்துவத்திற்கானதா?” எனும் கருத்து மேலோங்குகிறது. ஜனநாயக நீதியானது மக்களுக்கா, முதலாளிகளுக்கா என அரசு இயந்திரமும், அரசியல்வாதிகளுமே தம் செயல்பாடுகளின் மூலம் தெரிவிக்க வேண்டும்.

**இணையாசிரியர்**

*ஜனநாயக அ(நீதி)*


***கவிதைகள்…………………. 5 - 23***

*பொது அறிவு வினா- விடை….23 - 25*

*பொன்மொழிகள்………………26*

*போதைப் பொருள் ஒழிப்பு*

*தினம்……………………….. 27- 29*

***சிறுகதை……………………..29 – 31***

***கவிதைகள்…………………….31 - 32***

# *கவிதைகள்*

## விண்மீன்

வானம் என்பது வண்ணச் சோலை
சோலை தன்னில் சுடர்விடும் விண்மீன்
பகலைக் கண்டால் பதுங்கி நிற்கும் !
இரவைக் கண்டால் இதயங் களிக்கும்
எட்டாத் தொலைவில் இருப்பதனாலே
சிறிய வடிவில் சிரித்து மகிழும்
ஒவ்வொரு மீனும் ஒவ்வொரு கோளம்!
கண்போல் இமைத்துக் கதிரொளி வீசி
விண்ணில் இருப்பதால் விண்மீன் என்போம்!
கருப்பு கடலில் மின்னிடும் விண்மீன்
இரவை அழகாக்கிய விண்மீன்

கே.விஜய் விநாயகம்,
பி.எஸ்.சி. டி.எப்.டி

## முயற்சி

முயற்சி தான் வெற்றியின் முதல்படி என்றால்
அந்த முதற்படியை அடைய நீ முந்நூறு முறை
தோற்றாலும் முயற்சியை இழக்காதே !
முயற்சி என்பது விதை போல

அதை விதைத்துக் கொண்டே இரு
முளைத்தால் மரம்
இல்லையெனில் அது மண்ணிற்கு உரம்
ஆண்டவன் சோதிப்பது எல்லாரையும் அல்ல
உன்னைப் போல் சாதிக்கத் துடிக்கும்
புத்திசாலிகளை மட்டுமே... ஆதலால்
முடியும் வரை முயற்சி செய்
முடியா விட்டால் பயிற்சி செய்.

கு. சுருதி,
பி.எஸ்.சி.டி.எப்.டி முதலாண்டு

## மண்

என்னை நேசித்து
என்னுள் உறங்கிய
முத்தான வித்தே!
மழைநீரைப் பெற்று
என்னைப் பிளந்து கொண்டு
சிறு செடியாய் முளைத்து
இன்று மரமாய் வளர்ந்து
எல்லோருக்கும் பயனளிக்கும் மரமே !
உன்னை நேசிக்கும் மண் !!!

க. சந்தியா,
இளம் அறிவியல் இரண்டாமாண்டு நுண்ணுயிரியல்

# இயற்கை

இயற்கை!
இவ்வுலகத்தின் அழகு
மனிதன் தன்னை எவ்வளவுதான்
அசுத்தம் செய்தாலும்
தாய் போல் மறந்து
தன் பிள்ளைக்குச் சோறூட்டுகிறது
மழைத் துளியாய் வந்து...
குடிநீராகவும்
விவசாயியின் நம்பிக்கையாகவும்
மனிதன் மனதில்
புன்னகைக்கிறது!
பல மைல் தூரம் கடந்து வரும்
இந்த நீர்த்துளிகள்
இயற்கையின் அதிசயம்!!
ஆகவே,
மனிதனே உன்னைத்
தாய்போல் தாங்கும்
இவ்வியற்கையை நீதான்
காத்துக் கொள்ள வேண்டும்...
மழைநீர் சேமிப்போம்!
இயற்கை வளங்களைப் பெருவோம்...

ம.ஆஷிகா,
முதலாமாண்டு வணிகவியல்

## சந்தோசம்

மனதின் அமைதிக்காக
பயணங்களில் தேடி அலைவதை விட
ஓடக்கரை மணலில்
உன் தாய் கரம் பிடித்து
கொஞ்சம் நடந்து செல்...
அந்தக் காற்றும்
அந்த நிலமும்
தாயின் புன்னகையில் சுழலும் பூமி
அன்பின் விசையென அறிவாய்.

இரா. தீபா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.

## தாய்

உன் பிரசவ வலி தெரிந்திருந்தால்
குறைபிரசவத்தில் கூடப் பிறந்திருப்பேன் - உன்
சுமையைக் குறைக்க!
என் வலியை
உன் வலியாகக் கருதி
எல்லா தருணத்திலும்
என் வலி தெரியாமல் என்னைக் காத்தாய்!
ஒரு தாயாக மட்டுமின்றி

சிறந்த தோழியாகவும்
எனக்கு அறிவுரை கூறி
சிறந்த சான்றோராகத் திகழ்ந்தாய்!

நான் எத்தனை தவறுகள் செய்தாலும் - எனக்கு
மன்னிப்பை மட்டுமே
தண்டனையாக வழங்கும்
ஒரே நீதிபதி
தாய்.

இரா. தீபா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.

## வாழ்க்கைத் தத்துவங்கள்

அழிவைத் தருவது - ஆணவம்
ஆபத்தைத் தருவது - கோபம்
இருக்க வேண்டியது - மனசு
இருக்கக் கூடாதது - பொறாமை
உயர்வுக்கு வழி - உழைப்பு
கண் கண்ட தெய்வம் - பெற்றோர்
செய்ய வேண்டியது - உதவி
செய்யக் கூடாதது - துரோகம்
நம்பக் கூடாதது - வதந்தி
நழுவவிடக் கூடாதது - வாய்ப்பு
நம்முடன் வருவது - புண்ணியம்

பிரியக் கூடாதது - நட்பு

மறக்கக் கூடாதது - நன்றி

எம். காவ்யா
பி.எஸ்.சி. டி.எப்.டி, முதலாண்டு

## நட்பு

எங்கே பிறந்தாலும்
எப்படி இருந்தாலும்
உணர்வை உணர்வுக்கு
ஒன்று சேரத் தருவது தான்
உயிர் நட்பு
நீ மேலே உயரும்போது நீ யார் என்று
நண்பர்கள் அறிவார்கள்
நீ கீழே வரும் போது
உண்மையான நண்பர்கள் யார் என்று நீ அறிவாய்
நினைத்தவுடன் மழை
இரவு நேர மெல்லிசை
கள்ளமில்லாச் சிரிப்பு
பொய்யில்லா நட்பு
மீண்டும் ஒரு பள்ளிப் பருவம்
தோள் சாயத் தோழி
உயிர் கொடுக்கும் தோழன்
தாய் மடித் தூக்கம்

தூக்கத்தில் மரணம்
மரணம் வரை உங்கள் நட்பு

ஆர். அரவிந்த்,
பி.எஸ்.சி. டி.எப்.டி முதலாண்டு

## புதிய பாதை

கணக்குத் தீர்க்கும் வெறி
அவர்களின் கண்களில்
முந்திக் கொள்ளும் வேகம்
அவர் முகங்களில்
தீர்மானித்த திசையில்
ஓடிக் கொண்டிருந்தார்கள்
அந்தத் தீவிரவாதிகள்!

இடிக்கப் போகிறோம்
என்றான் இந்து!
எரிக்கப் போகிறோம்
என்றான் கிறித்தவன்!
வெடிக்கப் போகிறோம்
என்றான் முஸ்லீம்!

அய்யய்யோ... மீண்டுமா?
தீபங்களை தீப்பந்தங்களாக்கிய
தூண்டுகோல்களை

எப்போது எரித்துச் சாம்பலாக்கப் போகிறோம்?
இதுவே இன்றைய நிலை
மாடர்ன் இந்தியா!!

மு. இந்திரா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.

## வெற்றி

மனதில் உறுதி வேண்டும்
விழுந்தால் அழாதே... எழுந்திரு!!
தோற்றால் புலம்பாதே... போராடு!!
கிண்டலடித்தால் கலங்காதே... மன்னித்துவிடு
தள்ளினால் தளராதே... துள்ளியெழு
கஷ்டப்படுத்தினால் கதறாதே...
உதாசீனப்படுத்தினால் உளராதே...
உயர்ந்து காட்டு!!
கிடைக்காவிட்டால் குதிக்காதே... முயற்சி செய்
மன உறுதியோடு போராடினால்
சித்தத்தில் பக்குவமானால்
வெற்றி உன் விலாசம் கேட்கும்.

அ. தபதி
இளங்கலை ஆங்கிலம் முதலாமாண்டு.

## அம்மா

அம்மா...
இறைக்கே இணையாகி
வானிற்கு நிகராகி
பேரன்பிற்கு
இலக்கணமானவள் இவள்!!

ஈர்ஐந் திங்கள் வலி தாங்கி
மறுபிறவி கையில் ஏந்தி
உயிரை ஈன்றெடுக்கும்
சுமைதாங்கி இவள்!!
பிள்ளைகளுக்காகப் போராடும் போராளி
மகுடமில்லா அரசி
அவளே நம் அன்னை!!

பெ. வெங்கடேசன்
இளங்கலை ஆங்கிலம் முதலாமாண்டு

## பிரிவு

பிரிவென்ற வலைக்குள்
நாம் சிக்கிக் கொண்ட போதும்
நினைக்க நினைக்க இனிக்கும்
உன் நினைவுகளில் நான்
உயிர்ப்போடு வாழ்கிறேன்

கடல் கடந்து
மலை தாண்டி
பாலைவனத்திற்குப் பறந்து வந்த போதும்
நம் நட்புக்குப் பிரிவென்பது இல்லை!!
விண்ணில் நிலவு இல்லாத
நாட்கள் உண்டு
மண்ணில் மழை பொழியாத
காலமும் உண்டு
ஆனால் நண்பனே
உன் நினைவில்லாத
நாட்கள் இல்லை...

மா. தினேஷ்
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## போராட்டம்

வலியோடு போராடினால் தான்
ஒரு பெண் தாயாக முடியும்
இருளோடு போராடினால் தான்
புழு வண்ணத்துப் பூச்சியாக முடியும்
மண்ணோடு போராடினால் தான்
விதை மரமாக முடியும்
தோல்வியோடு போராடினால் தான்
வெற்றி படைக்க முடியும்...

போர்க்களத்தில் போராடினால் தான்
ஒருவன் வீரனாக முடியும்
வாழ்க்கையோடு போராடினால்தான்
நீ வரலாறு படைக்க முடியும்
வாழ்க்கை என்பதே ஒரு போராட்டம்
அதை நாம் கொண்டாடி வாழ்வோம்

டி.எஸ். ஹரிதா
முதலாண்டு டி.எப்.டி

## அம்மா

இந்த பூமிக்கு இன்னொரு
உயிரைக் கொண்டுவர தன்
உயிரைப் பணையம் வைக்கும்
உயிர் தான் அம்மா
மீண்டும் அமர முடியாத
ஒரு சிம்மாசனம் அவளின் கருவறை
தன் இரத்தத்தை
பாலாய் தந்து
365 நாட்கள் மட்டுமல்ல
3000 ஆண்டுகள் ஆனாலும்
நம்மைச் சுமக்கும் ஒரே உயிர் தாய்
அவள் காட்டும் அன்பைக் கடவுளால்
கூட காட்ட முடியாது!

எம். நவநீதகுமார்,
பி.எஸ்.சி. டி.எப்.டி முதலாண்டு

## அற்புதமான தருணம்

சாரல் மழையில் நனைந்த காற்று
தென்றலாய் சில்லிடுகிறது!
மழை நீர் கொட்டும் சத்தம்
புதியதொரு இசையமைக்கிறது!
மலர்களெல்லாம் நீரில் நனைந்து
தலையாட்டி புன்னகைக்கிறது!
எல்லோர் மனதும்
மழையில் நனையவே
மன்றாடி கெஞ்சுகிறது!
பல மைல் தூரம் கடந்து வரும்
இந்த நீர்த்துளிகள்
தேவனின் தீர்த்தமாகவும் இருக்கலாம்!

எஸ். மனோஜ்குமார்,
பி.எஸ்.சி. டி.எப்.டி முதலாண்டு

## மரம் ஒரு வரம்

ஆலகாலத்தை உட்கொண்டு
அமுதம் அளித்து
ஈசனைப் போல்
தீய காற்றை அழித்து
நம்மையெல்லாம் வாழவைக்கும்
மரத்தைப் பாதுகாப்போம்!!

வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்!!
நாட்டின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க
நல் வரம் கொடுப்போம்....
உயிரினங்களின் நல்வாழ்விற்கு
பயனுள்ளதாக மரம் இருக்கிறது...
ஓரறிவு திறனுள்ள மரம்
ஏழறிவு திறன் கொண்டு
படைக்கப்பட்ட மனிதன் உயிர்
வாழ்வதற்குப் பயனாக உள்ள மரத்தை
என்றும் பாதுகாப்போம்! ...

திவ்யா.அ
II B.Sc MB

## காதல் தென்றல்

காதல் கொண்ட மனம்
கவிதை எழுதுவதைப் பார்த்து
தென்றல் வீசும்...
காற்று பூவை நுகரும் போது
வானை நோக்கிய கண்கள்
விடியலைப் பார்க்கும் போது
மண்ணைப் பார்த்த மரமோ
நேசம் கொள்ளும் போது

நெஞ்சில் உள்ள காதல்
உண்மையை உரைக்கும் போது
கண்ணில் உள்ள காதல்
உன்னை உணரும் போது
நெஞ்சில் துளிர்த்தது காதல் தென்றல்

ரா. கிருபாகரன்
பி.எஸ்.சி. டி.எப்.டி

## அம்மா

எத்தனை உறவுகள்
அகிலத்தில் இருந்தாலும்
காலத்தின் மோதலினால்
அவை மாறுபடும்
தாயே!
உன் சுவாசம் மட்டும் போதும்
என்னை இந்நிலம்
வாழ்த்தி வரும்!!!

சு. பிரபா
பி.ஏ ஆங்கிலம் முதலாமாண்டு

## ஒற்றுமை

வேறுபாடு உள்ள விரல்கள்
வேலைசெய்யும் போது ஒன்றுபடும்!

வேறுபாடு உள்ள குரல்கள்
கூட்டாக இசைக்கும் போது இனிமை தரும்!

பல்வேறு சுவையுள்ள பழங்கள்
பஞ்சாமிர்தமாகும் போது ஒரே சுவையாகும்!

ஆம்!
வேற்றுமையில் ஒற்றுமையே
சமுதாய வாழ்வின் அடிப்படை!

சு. பிரபா
பி.ஏ ஆங்கிலம் முதலாமாண்டு

## அம்மா

என் மகளாக அம்மா...
அம்மா உன்னை நினைக்கையில்
என் உயிரெலாம்
அழுகிறது அம்மா!
அம்மா என்ற வார்த்தையை விட
சிறந்த வார்த்தை எதும் தெரியவில்லை அம்மா!
என் வாழ்நாள் முழுவதும்
உனக்காக மட்டுமே
அம்மா!
என்னை வெறுக்காத உயிர்
நீ மட்டுமே அம்மா!

கடவுளும் பிச்சை வாங்குவான்
பாசத்தை...
உன்னிடமே அம்மா!
என் உயிர் உனக்காகவே அம்மா!
கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன்
உனக்கு முன்னால்
என் உயிர் போக வேண்டும்!
இனி ஜென்மங்கள் என்றால்
என் மகளாக
நீயே வேண்டும் அம்மா!
நான் சாகும் வரை
நான் சுவாசிக்கும்
ஒரே உயிர்... பெயர்...
அம்மா! அம்மா! அம்மா!

சி. சூர்யா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## மழை

அளவாய் வரும்போது
அமுதத்துளி
அளவின்றி வரும்போது
அதுவே விஷத்துளி
அறவே வராதபோது
வரவைக்கும் கண்ணீர்த்துளி
மொத்தத்தில் இதுவே

மண்ணின் உயிர்த்துளி
சித்தத்தில் உறுதிகொண்டு
சேமிப்போம் மழைத்துளி.

ஏ. துரைபாண்டி
முதலாண்டு கணினி பயன்பாட்டியல் துறை, 'அ'பிரிவு

## தமிழ்மொழி

ஒவ்வொரு மனிதனுக்கும்
தாயாக விளங்கும் தமிழ் மொழி
தன்னலத்திற்காக வாழாமல்
பிறர் நலத்திற்காகவே வாழ்கிறது
இந்த விண்ணோடும் மண்ணோடும்
சேர்ந்து பிரகாசிக்கிறது
மானிடர்களே!
தாயைப் போற்றுவோம்
தமிழ் மொழியை வளர்ப்போம்!

சீ.பிரியதர்சினி
முதலாண்டு கணினி பயன்பாட்டியல் துறை, 'அ'பிரிவு

## காதல்

காதல் என்பது ஈர் உள்ளம் இணைந்தது...
அது புரிந்தவர்க்கு வாழ்க்கை
புரியாதவர்களுக்கு வெறும் வார்த்தை
இரு உள்ளம் இணைந்திட

நம் வாழ்வு ஒன்றாகிட வேண்டும்...
உயிர் உள்ளவரை
அன்பெனும் ஆயுதத்தால் வெற்றி கொள்ள வேண்டும்.

விஷ்ணுராஜ்
முதலாமாண்டு வணிகவியல்

## சூரியன்

கதிரவனே.........
நீ மக்களுக்கு நிறைய
நன்மை செய்கிறாயே? ஏன்?
காலையில் பிரகாசமாக உதிக்கும் நீயே
எல்லா உயிருக்கும்
உயிர் ஊட்டுவது போல் காட்சியளிக்கிறாய்
விவசாயிகளுக்கு நீ ஒரு கடவுள்
மற்றவர்களுக்கு நீ ஒரு கடிகாரம்
உன் நிழல் பூமியின் மீது விழும்போது
செடி, கொடிகள் எல்லாம் தளர்கின்றன.
தமிழர்கள் திருநாள் எனப் போற்றப்படும்
முதல் பொங்கல் உனக்கே அர்ப்பணிக்கப்படுகிறது.
அண்டத்தில் நீர் ராஜா...
உன்னை யாராலும் நெருங்க
முடியாது...

தி.தெ.சுபிக்ஷா
முதலாண்டு, வணிகவியல்துறை

## பெண்

என்னைப் பெற்றெடுத்த தாயும் நீயே
என்னிடம் சண்டையிடும் தங்கையும் நீயே
எனக்கு அறிவுரை கூறும் அக்காவும் நீயே
என் வாழ்க்கை துணைவியும் நீயே
என்னிடம் அன்பாகப் பழகும் தோழியும் நீயே
என் வாழ்க்கை முழுவதும் நீயே
நீ இல்லையென்றால் வாழ்க்கை இல்லை
நீ இல்லையென்றால் உலகமும் இல்லை

முகுந்தன்
முதலாண்டு, வணிகவியல் துறை

## *பொது அறிவு*

1. உடலில் இரத்தம் பாயாத பகுதி எது?
   விடை : கருவிழி
2. மிகச்சிறிய முட்டையிடும் பறவை எது?
   விடை : வொவெயின் ஹம்மிங் பறவை
3. பாம்புகளின் ஜென்ம விரோதி எந்தப் பறவை?
   விடை : காரியதரிசிப் பறவை
4. இந்தியாவின் பூந்தோட்டம் என்றழைக்கப்படுவது எது?
   விடை : பெங்களூர்
5. எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்தியப் பெண் யார்?
   விடை : பச்சேந்திரி பாய்

6. தமிழில் வெளிவந்த முதல் நாடக நூல் எது?

விடை : ராஜராஜ விஜயம்

7. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது?

விடை : நார்வே

8. பழங்காலத்தில் இந்தியாவின் நுழைவாயிலாக இருந்தது எது?

விடை : கைபர் கணவாய்

9. 88 நாட்களுக்கு தொடர்ந்து பகலாகவே இருக்கும் நாடு எது?

விடை : நார்வே

10. உலகில் மிகப் பழமையான கோட்டை எங்குள்ளது?

விடை : ஏமன் நாட்டில் கோமடன் என்னுமிடத்தில் உள்ளது.

11. இந்தியாவின் நைட்டிங் கேல் எனப்படுபவர் யார்?

விடை : சரோஜினி நாயுடு

ப.நவீனா

இளங்கலை ஆங்கிலம், முதலாண்டு

## பொது அறிவு

1. எந்த நாட்டில் பட்டுத்துணி முதன் முதலில் தயாரானது?

விடை : சீனா

2. தேசியக் கவி என்று அழைக்கப்பெறும் தமிழ்க்கவிஞர் யார்?

விடை : மகாகவி பாரதியார்

3. விண்வெளிக்கு முதன்முதலாகச் சென்ற நாயின் பெயர் என்ன?

விடை : லைகா

4. மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் எங்கு உள்ளது?

விடை: சென்னை

5. இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் எங்கு அமைந்து உள்ளது?

விடை : புதுடில்லி

6. கப்பல் கட்டும் தொழிற்சாலை எங்கு அமைந்து உள்ளது?

விடை : விசாகப்பட்டினம்

7. இந்தியாவின் மிகப்பெரிய சிறை எது?

விடை : திகார்

8. இறைவனின் பிள்ளை என்று அழைக்கப்பட்டவர் யார்?

விடை : திருஞானசம்பந்தர்.

9. உலகில் இயற்கைப் பிரிவுகள் எத்தனை?

விடை : ஒன்பது

10. அதிகமாகப் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொல் எது?

விடை : தி

11. புன்னகை நாடு என அழைக்கப்படும் நாடு எது?

விடை : தாய்லாந்து

12. பௌத்தர்களின் புனித மரம் எது?

விடை : நாவல் மரம்

13. ஆதி உலா என்று அழைக்கப்படும் நூல் எது?

விடை : திருக்கைலாய ஞான உலா

14. இந்திய உச்ச நீதி மன்றம் அமைந்துள்ள இடம் எது?

விடை : புதுடில்லி

கு.முத்துமணி,
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

# பொன்மொழிகள்

1. ஒரு நல்ல நூலைப் போலச் சிறந்த நண்பனும் நெருக்கமான உறவினனும் எனக்கு வேறு இல்லை.

-அறிஞர் அண்ணா

2. உழைப்பின் சக்தியே உலகில் மிக உன்னதமானது அதை வெற்றி கொள்ளும் ஆற்றல் வேறெந்த சக்திக்கும் கிடையாது.

-ஆபிரகாம் லிங்கன்

3. நாணயமாக நடப்பவர்கள் ஒளிக்கும் இருளுக்கும் அஞ்சுவதில்லை.

-நேதாஜி

4. நீ யாரிடம் உன் ரகசியங்களைச் சொல்கிறாயோ அவரிடம் உன் சுதந்திரத்தை இழப்பாய்

-லாவோட்சு

5. மானமுள்ள ஆயிரம் பேருடன் போராடலாம் மானமற்ற ஒருவனுடன் போராடுவது சிரமமான காரியம்.

-பெரியார்

6. குறிக்கோளை அடையும் முயற்சியில் தான் மகிமை இருக்கிறது. அந்தக் குறிக்கோளை அடைவதில் இல்லை.

- மகாத்மா காந்தி

7. கட்டாயப்படுத்தி புகுத்தப்பெறும் அறிவு மனதில் பதியாது.

- பிளாட்டோ

மு.தேவராஜ்
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## *போதைப்பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்பு தினம் - ஜீன் 26*

ஜீன் 26 – ஆம் தேதி சர்வதேச **போதைப்பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்பு தினம்** கடைபிடிக்கப்படுகிறது. உலக வர்த்தகத்தில் பெட்ரோல், ராணுவ தளவாடங்களுக்கு அடுத்து, மூன்றாவது இடத்தில் போதைப்பொருள் வியாபாரம் உள்ளது. ஓர் ஆண்டிற்கு 5 லட்சம் கோடி ரூபாய்க்கு போதைப்பொருள் வியாபாரம் நடக்கிறது. இதை ஒழிக்க, சட்டங்கள் மூலம் உலக நாடுகள் முயற்சிகள் எடுக்கின்றன. ஆனாலும் இதன் பயன்பாடு அதிகரிக்கிறதே தவிர குறையவில்லை. புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தியும் கடத்தல் நடக்கிறது. போதைப்பொருள் பயன்பாடு மற்றும் கடத்தலை முற்றிலும் ஒழிக்கும் விதமாக, ஜூன் 26-ம் தேதி போதைப்பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது. “போதை” சமூகத்தை அழிக்கும் ஒரு “அரக்கன்”. போதைப்பொருளால், அவர் மட்டுமின்றி, அவரது குடும்பம் மற்றும் சமுதாயமும் பாதிப்படைகிறது. இதுதான் அனைத்து வகையான நோய்களுக்கும் முன்னோடி. சிலர் இதற்கு அடிமையாகவே மாறிவிட்டனர். போதைப்பொருள் பயன்பாடு எந்தளவுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறதோ, அதைவிட சட்டவிரோதமாக கடத்தி கோடிக்கணக்கில் பணம் ஈட்டப்படுவதாலும் பாதிப்பு ஏற்படுகிறது.

**போதையின் வகை**

போதை என்றாலே, பெரும்பாலானோர் மது மற்றும் சிகரட்டை மட்டுமே நினைக்கின்றனர். இதையும் தாண்டி, உலகம் முழுவதும் மற்ற போதை பொருட்களின் உற்பத்தி, கடத்தல் அமோகமாக நடக்கிறது. நம்ம ஊர் “டாஸ்மாக்” விற்பனையைத் “தூக்கிச் சாப்பிடும்” அளவுக்கு, இதன் வர்த்தக மதிப்பு பல ஆயிரம் கோடி ரூபாய். கஞ்சா, கொகைன், பிரவுன்சுகர், ஹெராயின், அபின், புகையிலை, மது, ஊக்க மருந்து, ஒயிட்னர் மற்றும் சில மருந்துகள், இளைஞர்களிடம் வேகமாக பரவும் பழக்கங்கள். உடலை மட்டுமின்றி, மனதையும் சிதைத்து, குடும்ப வாழ்க்கையையும் அழித்து, முடிவில் மரணத்துக்கே அழைத்து செல்பவை இவை. மூலப்பொருட்களை பயிரிடுதலில் துவங்கி, வளர்ப்பு, விளைச்சல், உற்பத்தி, ஏற்றுமதி எனப் பல கட்டங்களாக இதன் வர்த்தகம் நடக்கிறது.

**எப்படித் தடுப்பது**

போதைக்கு அடிமையானவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கி, மறுவாழ்வு அளிக்க வேண்டும். விற்பனை மற்றும் உற்பத்தியை முற்றிலும் தடை செய்தால் மட்டுமே இதனைத் தடுக்க முடியும்.

**சட்டம் சொல்வது என்ன?**

இந்தியாவின் போதைப்பொருள் தடுப்பு சட்டம் 1985-ன் படி, போதைப்பொருள் தடுப்பு ஆணையம், 1986, மார்ச் 17-ம் தேதி, தொடங்கப்பட்டது. இது போதைப்பொருள் தொடர்பான குற்றங்களை கண்காணிக்கிறது. இதன் தலைமையகம் டில்லி. மண்டல

அலுவலகங்கள் சென்னை, பெங்களூர், கொல்கத்தா உள்ளிட்ட 12 நகரங்களில் செயல்படுகிறது. மருத்துவ விதிமுறைகளுக்கு உட்படாத போதைப்பொருட்களை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் சட்டவிரோதமாகக் கடத்துதல், பதுக்குதல் ஆகியவை குற்றம் என இந்தச் சட்டம் சொல்கிறது. இதனை மீறுபவர்களுக்கு 10 முதல் 30 வருட சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படுகிறது. குற்றங்களின் தன்மையைப் பொறுத்து மரண தண்டனையும் வழங்கப்படுகிறது.

**நன்றி : தினமலர்**

**திரு. செ.தங்கராஜ்**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை &**

**நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்**

## *சிறுகதை*

## முடிவில்லாத தொடர்கதை

அது ஒரு பசுமை கொஞ்சும் கிராமம். எங்கு பார்த்தாலும் கண்களைக் கவரும் வண்ணம் பச்சைப் பசேல் என்று வயல்வெளிகள். அந்தக் கிராமத்தில் வசித்து வந்த ஒரு பெண்ணின் கதை இது. ஒருநாள் காலைப் பொழுதில் ஊரில் தண்டோரா போட்டவாறே சென்றான் மன்னனின் சேவையாள். மன்னன்

ஆசைப்படி யாரொருவர் முடிவில்லாத தொடர்கதையைக் கூறுகிறார்களோ அவர்களுக்கு மன்னனின் ராஜ்ஜியத்தைக் கொடுக்க உள்ளதாகவும் அத்தண்டோராவில் சொல்லப்பட்டது. இதனை அறிந்த பல்வேறு அறிஞர்கள், புலவர்கள் மன்னரிடம் சென்று கதையைக் கூறினர். யாருடைய கதையும் 3 நாட்களைத் தாண்டவில்லை. இந்த கதைகூறும் முயற்சியைப் பிற ஊரினரும் மேற்கொண்டு தோல்வியையே தழுவினர்.

அச்சமயத்தில் ஒரு ஏழைப் பெண் இந்த செய்தியை அறிந்து கதை கூற அரண்மனைக்குச் சென்றாள். உண்மையில் அவளுக்கு முடிவில்லாத கதை ஒன்றும் தெரியாது. அரண்மனைக்குச் செல்லும் வழியில் எப்படி கதைக் கூறுவது என யோசித்துக் கொண்டே சென்றாள். வழியிடையே இயற்கை அழகைக் கண்டாள். அது என்னவென்றால் சிட்டுக்குருவி ஒன்று அடுக்கி வைத்த நெல்மூட்டைகளில் இருந்த சிறிய ஓட்டையைப் பயன்படுத்தி நெல் மணிகளை எடுத்து தனது கூட்டில் சேர்த்துக் கொண்டிருந்தது. இதைப் பார்த்த அப்பெண் கதை கிடைத்துவிட்டது என்று நம்பிக்கையுடன் அரண்மனைக்குக் கதை கூறச் சென்றாள். அரண்மனை வாயிலில் சென்று கதை கூற வந்திருப்பதாக வாயிற்காவலனிடம் கூறினாள். வாயிற்காப்போனும் சிறு எள்ளல் கலந்த பார்வையுடன் உள்ளே சென்றான். பின்னர் மன்னன் அனுமதியளித்தவுடன் உள்ளே அழைத்துச் சென்றான். மன்னனிடம் தன்னை அறிமுகம் செய்தவுடன் கதை கூற ஆரம்பித்தாள்.

அந்த ஏழைப்பெண் எவ்வாறு முடிவில்லா கதை கூறியிருப்பாள்? என்ன கதை கூறியிருப்பாள்? சிட்டுக்குருவியைப் பார்த்து அப்படி முடிவில்லாத கதை எவ்வாறு அவள் மனதில் தோன்றியிருக்கும்? எனும் ஆர்வம் உங்களுக்கும் தோன்றியுள்ளது

தானே.... அதே ஆர்வத்தோடு காத்திருங்கள்... அடுத்த இதழில் அப்பெண் சொன்ன கதை தொடரும் முடிவில்லாத தொடர்கதையாக...

கு. மனோஜ் குமார்
இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு.

# *கவிதைகள்*

## வானவில்

பஞ்சு மேகங்களில்
தோன்றும்
அழகான படைப்பு
எத்தனையோ நிறங்கள்
இருப்பினும் வெறும்
ஏழு நிறங்களைக் கொண்ட
ஓர் அதிசயம்

மனித உணர்வுகளை
வெளிப்படுத்துவதாய் அமையும்
கருவியும் இதுவே
இதனுள் எத்துனை
வேற்றுமைகள் இருப்பினும்

ஒன்று சேர்த்து கோர்த்த
பூமாலை போல
வர்ணமயமான உணர்வு...

மனிதனிடம் இருக்கும்
ஒற்றுமையை உணர
இயற்கை தந்த வரம் இது
குளிர்ச்சியான நேரங்களில் வந்து
மனிதர்களின் கண்களை
குளிரச் செய்வது
வானவில்!

காணாத இமைகளில்
கண் இமைக்காமல்
இரசிக்கும் அழகானதொரு
வரம்...
இயற்கை.

க.ரஞ்சூரியா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு